2. தகவல் கோரல்.

அ. வினாக்களுக்கு துறைகளில் இருந்து பதில் அனுப்பப் பெறுவதில் காலதாமதம் குறித்து.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஏற்கனவே நான் கேட்டேன், பிறகு எழுப்பச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. கூத்தகுடி சண்முகம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சம்பந்தமாக ஒரு விளக்கத்தைத் தங்களிடமிருந்து பெறவிரும்புகிறேன். கேள்விகளுக்கான பதில்கள் 6 வாரங்களுக்குள் சொல்லப்படவேண்டுமென்று விதிகள் இருந்தாலும் அப்படி பதில்கள் வருவதில்லை. ஒவ்வொரு இலாகாவிலும் எவ்வளவு கேள்விகள் பதில்கள் அனுப்பப்படாமல் வைத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதுபற்றி அமைச்சர்கள் அந்த அந்த இலாக்காக்களைக் கேட்டு பதில்களைப் பெற முயற்சித்தார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். விதியை ஒழுங்காக அமல்நடத்த வேண்டியது தங்கள் பொறுப்பு. ஆறுவாரங்களுக்கு உள்ளாக பதில்கள் வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அதே விஷயம் பற்றி நான் போன பட்ஜெட் செஷனிலே முதல் நாள் எப்படி ரூல்ஸை மீறி துறைகளிலே கேள்விகள் பென்டிங் ஆக இருக்கின்றன என்று சொன்னபோது தாங்கள் ஆவன செய்வதாகச் சொன்னீர்கள். அந்த செக்ஷனிலே நான் கேட்டபோது—நான்கு தரம் கேட்டேன், மந்திரி லெவலில் பெண்டிங்க் ஆக இருப்பது எவ்வளவு, பதிலே வராமல் இருப்பது எவ்வளவு என்று கேட்டேன்——அதற்கு அவர்கள் எழுதிக்கொடுங்கள் சொல்கிறோம் என்று சொன்னார்கள், ரிட்டனாக எழுதிக் கொடுத்தும் பதில் இல்லை. மறுமுறை கேட்டபோது இல்லை சார், சரியாக இருக்கும் என்று சொல்கிறார்கள், அடுத்தமுறை என்னை வரவழைக்காதீர்கள் என்று நான் சொன்னேன். ஆனால் இன்னும் பல முக்கியமான கேள்விகளுக்குப் பதில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையை அவையின் முன் கொண்டு வந்ததை நான் ஏற்றுக்கொண்டு சொல்கிறேன், அதைப்பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், விதியின்படி 42 நாட்களுக்குள் இலாக்காவிலிருந்து பதில் வந்தாக வேண்டும், அதை துரிதப் படுத்த வேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் கேள்விகளுக்கு வந்திருக்கின்ற விடைகளையே நம்மால்

வைத்து முடிக்க முடியவில்லை. 600 கேள்விகள் என்னுடைய கையில் இருக்கின்றன. 20 கேள்விகளையே ஒரு மணி நேரத்தில் முடிக்க முடியவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : சட்டசபை அடிக்கடி கூடாததால் தான் கேள்விகள் அதிகமாகிவிட்டன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; பேரவைத் தலைவரவர்களே, எனக்கு நினைவு சரியாக இருக்குமேயானால் பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவுகளில் ஒன்று, 'ஸீரோ அவர்' நேரத்தில் விளக்கங்கள் கேட்பதில் அந்தந்தக் கட்சியின் தலைவர்கள்தான் கேட்க வேண்டுமே தவிர எல்லோரும் கேட்க கூடாது. அந்த முடிவை எதிர்க்கட்சித் தலைவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்து, அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களை இயக்கிக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர்கள் இல்லாத நேரத்தில் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் மெம்பர் இல்லை, பேராசிரியர் அவர்கள் சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நாம் எடுத்த முடிவு அவருக்குத் தெரியாது. அதனால்தான் பேரவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், பின்னால் இருப்பவர்கள் எழுப்பாமல் முன்னால் உள்ள தலைவர்கள் எழுப்புவதைப்பற்றிச் சொன்னார்கள்.

திரு. க. சுப்பு : தலைவர்கள் என்றால் தலைவர்கள் மட்டும்தானே தவிர துணைத் தலைவர், இணைத்தலைவர் எல்லாம் கிடையாது அல்லவா?

திரு. மு. அம்பிகாபதி ; தலைவரவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுதான் பேரவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், அதை ஏற்று உறுப்பினரவர்கள் அமர வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : கேள்வி கேட்டது அம்பிகாபதியா, கூத்தகுடி சண்முகமா என்பது அவருக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தத்திலே அவர் கேட்டார், கூத்தகுடி சண்முகமோ அல்லது அம்பிகாபதியா என்று குறிப்பிட்டுக் கேட்கவில்லை, பொதுப்படையாக கேள்விகள்

1979 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

தரப்பட்டு ஆறு வாரங்களில் பதில் எங்களுக்கு வரவில்லை, ஆறு வாரங்கள் கடந்தும்கூட இணைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுதான் அவர்கள் சொன்னது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: நான் எவ்வளவோ கேள்விகள் எழுதிக் கொடுத்திருக்கிறேன், இதுவரைக்கும் பதில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூத்தகுடி சண்முகம் அவர்கள் கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லா உறுப்பினர்களும் கொடுத்துள்ளதைச் சேர்த்துப் பார்த்தால் ஏறக் குறைய 10,000 கேள்விகள் இருக்கலாம். ஆனால் நம்முடைய பேரவை கூடுவது ஒரு வருஷத்திற்கு அதிகமாக இருந்தால் 85 நாட்கள் 90 நாட்கள் தான். எனினும் ஆறு வாரத்திற்குள் பதில் வர வேண்டுமென்ற விதியை அவசியம் அமல்படுத்த வேண்டுமென்பதில் நானும் அக்கறை கொண்டவன், ஆனால் பதில்கள் வந்து விட்டாலும் பேரவையிலே வைக்க முடியாத சூழ்நிலை இருப்பதை நான் சொல்லியாக வேண்டும். இப்பொழுதே 600 கேள்விகள் இருக்கின்றன, இப்போது பேரவை முடிந்தவுடன் அவைகளை அச்சிட்டு அனுப்ப வேண்டிய நிலை எனக்கு இருக்கிறது. இருந்தாலும் துறைகளில் காலதாமதம் ஆகாமல் துரிதமாகத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, அவை முன்னவரவர்கள் ரெய்ஸ் செய்த விஷயம் அப்படியே விட்டுப் போய் விட்டது. அவையின் ப்ரொசீஜர் சம்பந்தமாக, ஸ்ரோ அவரில் முன் பெஞ்சில் உள்ள தலைவர்கள் மட்டும்தான் கேட்கலாம் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். போன செஷனிலே எக்சிஜன்சீஸ்-க்காக அந்த முறையிலே வந்திருக்குமே தவிர நிரந்தரமாக அல்ல. (குறுக்கீடு) என்னுடைய கட்சியின் சார்பாக அட்டெண்ட் செய்த உறுப்பினர்களைக் கன்சல்ட் செய்திருக்கிறேன். 'ஆஸ் பர் ரூல்ஸ்' 'வி ஆர் ஈகுவல்ஸ்' நமக்கு ரைட்ஸ் உண்டு. அதை அனுமதிப்பதற்கும், அனுமதிக்காததற்குமான பொறுப்பு உங்களுக்கு உண்டு. அந்த ஏற்பாடு அந்த செஷனுக்குத்தானே தவிர இந்த செஷனுக்கு இந்த பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் புதுப்பிக்கப்படவில்லை, அதோடு முடிந்துவிட்டது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், அந்தக் குறிப்பிட்ட செஷனுக்கு எக்சிஜன்சீஸ்-க்காக எடுத்துக்கொண்ட முடிவு என்று சொன்னார்கள். அப்படி இல்லை. மாறாக, ஸிரோ அவரில் இப்படிப்பட்ட கேள்விகளை எல்லோரும் கேட்க ஆரம்பித்தால் நேரம் பாழடிக்கப்படுகிறது, வீணடிக்கப்படுகிறது என்ற காரணத்திற்காக, ஓர்க்கிங் அரேன்ஜ்மெண்டுக்காகச்

[திரு. கி. மனோகரன்] [1979 அக்டோபர் 31

செய்யப்பட்டது. எல்லோரும் ஈகுவல்தான், அதற்காக எல்லோரும் தலைவர்களாக இங்கே வந்து உட்கார்ந்து கொள்ள முடியாது, தலைவர்களும் இருப்பார்கள், தொண்டர்களும் இருப்பார்கள், எல்லோரும் இருப்பார்கள். நாம் எடுத்துக் கொண்ட முடிவு நேரத்தைப் பாதுகாப்பதற்காகவும், வீணடிக்காமல் இருப்பதற்காகவும்தான், தலைவர்களே கேட்பது நல்லது என்ற அந்த முடிவை எடுத்தோம். இது ஒரு ஓர்க்கிங் அரேஞ்மென்ட் என்ற அளவுக்கு எடுத்தோம், சட்டம் அல்ல, விதி அல்ல, எதுவும் அல்ல. அந்த மரபைப் பாதுகாக்க வேண்டுமென்றுதான் நான் வேண்டுகோள் விடுத்தேனே தவிர இது விதி--விதிக்கு எதிராக சதி--செய்யக்கூடாது--என்று நான் சொல்லவில்லை.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உமாநாத் அவர்கள் 17-3-1979-லே எத்தனை கேள்விகள் உள்ளன, எத்தனை தயாராக இருக்கின்றன என்று எழுதிக் கேட்ட கேள்விக்கு, நாங்கள் பதில் தந்ததற்கு எங்களிடம் நகல் இருக்கிறது. (குறுக்கீடு) கனம் உறுப்பினருக்கு வரவில்லையென்றால், வீட்டிலே போய்ப் பார்க்க வேண்டும்.

நம்முடைய அவையில் 'சீரோ அவர்' கிடையாது. அடுத்து, திரு. உமாநாத் அவர்கள், அலுவல் ஆய்வுக் குழுவிலே போன கூட்டத்தில் எடுத்த முடிவு, இந்தக் கூட்டத்திற்குப் பொருந்தாது, அது அலுவல் ஆய்வுக்குழுவில் காலாவதியாகிவிட்ட ஒன்று என்று சொன்னார்கள். இந்தக் கூட்டத்தில் மறுபடியும் அது வேண்டாம் என்று முடிவெடுத்திருந்தால்தான் அவர்கள் அப்படிச் சொல்லலாம். அப்படி ஒன்றும் முடிவு எடுக்கவில்லை. அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படி, கட்சித் தலைவர்கள் மட்டும்தான் கேட்க வேண்டும் என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட ஒன்று.

*திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, 'சீரோ அவர்' இங்கே கிடையாது என்பது பொதுவான, ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. 'சீரோ அவர்' என்று பெயர் கிடையாதே தவிர, நடைமுறையில் பிரச்னை எழுவது உண்டு. ஆகவே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் அனுமதிப்பதாலே, அதற்குப் பதில் சொல்வதாலே........

திரு. க. அன்பழகன்: அது வேறு வழியில்லாத ஒரு சூழ்நிலை காரணமாக, சில பிரச்னைகள் வந்து விடுகிறபொழுது, தாங்கள் ஏதேனும் ஒரு முடிவு சொல்ல இந்த நேரம் பயன்படுத்தப்படுகிறது. அதிலே பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே, பேசப்பட்டதனுடைய கருத்தாக நான் அறிந்த வரையில், திடீரென்று ஏற்படுகிற

1979 அக்டோபர் 31] [திரு. க. அன்பழகன்]

பிரச்னைகளை எழுப்புவதற்கு--நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—வெளியிலே திடீரென்று ஏற்படுகின்ற எத்தனையோ பிரச்னைகளை எழுப்புவதற்கு, நோட்டீஸ் கொடுக்காமல், அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்காமல், ஒரு பிரச்னையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு தலைவர்கள் மட்டும்தான் அந்தப் பிரச்னையைப் பற்றி எழுப்பலாம் என்பதுதான் உணரப்பட்ட உண்மையே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுடைய இயல்பான உரிமைகளை, சபாநாயகர் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய அப்படிப்பட்ட பிரச்னைகளை, கேள்விக்குப் பதில் போன்ற பிரச்னைகளை அல்லது கொடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளை, தலைவர் அவர்கள் எப்படி முடிவெடுக்கிறார்கள் என்று கேட்கக்கூடிய நிலைமை, உறுப்பினர்களுடைய உரிமைகள் நேரடியாக வரும்போது, கட்சித் தலைவர்கள் மூலம்தான் கேட்க வேண்டுமென்று சொல்வது அவ்வளவு நியாயம் அல்ல. எனவே, சில கட்டங்களில் உறுப்பினர்களது உரிமை, சில நெருக்கடியான சூழ்நிலைகளில் தலைவர்களுடைய உரிமை, இரண்டும் முன்னவருக்குப் பதில் கூற எப்படி வாய்ப்பு இருக்கிறதோ, அதற்கேற்ப என்று கருத்திற்கொள்ள வேண்டுமே தவிர, அடியோடு அனைத்துக்கும் தலைவர்கள் மீது பொறுப்பு போட்டு, உறுப்பினர்களுடைய உரிமையைத் தடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஒத்துக் கொள்கிறேன். நான் சொல்வது பேரவை முன்னவர் குறிப்பிட்டது, கேள்வி நேரம் முடிந்தவுடன், பொதுப் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் முதல் வரிசையிலே உள்ள கட்சித் தலைவர்கள்தான் எழுப்ப வேண்டும் என்பது நாமே வகுத்துக் கொண்டுள்ள ஒரு முறை என்பதுதான். மற்ற பிரச்னைகள் மீது உறுப்பினர்களுக்கு உரிமைகள் தரப்படுகின்றன. அது யாருக்கும் மறுக்கப்படவில்லை. இப்பொழுதும் கூட திரு. சுப்புவுக்கு அனுமதி தரப் போகிறேன். அதை யாரும் நிறுத்தவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : அந்த மாதிரி ரூலிங்கே தவறு. முதல் வரிசையிலே உள்ளவர்கள்தான் இந்த மன்றத்திலே கேள்வி எழுப்ப வேண்டுமென்று கொடுக்கின்ற ரூலிங்கே தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புரிந்து கொண்டு பேசுங்கள். ஏதாவது பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால் சொல்லுங்கள்.